செ.வெ.எண்:76 நாள்:31.01.2020

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளி கல்வித்துறையின் சார்பில் 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பெருந்தலைவர் காமராஜர் விருதுதினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளி கல்வித்துறையின் சார்பில் 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பெருந்தலைவர் காமராஜர் விருது வழங்கும் நிகழ்ச்சி இன்று (31.01.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பெருந்தலைவர் காமராஜர் விருதுதினை வழங்கினார். மேலும், 2017 - 2018ம் ஆண்டிற்கான சிறந்த தொடக்கப்பள்ளிக்கான விருதுதினையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

தமிழக அரசு பள்ளி கல்வித்துறையின் மூலம் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் மடிக்கணிணி வழங்கும் திட்டம் உள்ளிட்ட 14 வகையான திட்டங்கள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழ் வழியில் பயின்று தேர்ச்சி பெற்று, பன்முகத்தன்மையுடன் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் விருது வழங்கப்படுகிறது. கல்வியுடன் பல்வேறு இதர செயல்பாடுகளிலும் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களுக்கு காமராஜர் விருதுடன் 10ம் வகுப்பு அளவில் ரூ.10,000/-மும், 12ம் வகுப்பு அளவில் ரூ.20,000/-மும் பரிசு தொகையும் வழங்கப்படுகிறது. 2018 - 2019ம் ஆண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் 10ம் வகுப்பு பயிலும் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த 15 மாணவ, மாணவியர்களும், 12ம் வகுப்பு பயிலும் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த 15 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் 30 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் கல்வியில் மட்டும் அல்ல விளையாட்டு கலை போன்ற பிற செயல்பாடுகளிலும் சிறந்து விளங்கிட வேண்டும். மேலும், 2017 - 2018ம் ஆண்டில் தொடக்க கல்வித்துறையின் மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தாறு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கொப்பம்பட்டி, தூத்துக்குடி நகர் பகுதியை சார்ந்த மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, சாத்தான்குளம் ஒன்றியம் சமுத்துபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி உள்ளிட்ட பள்ளிகளுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ந்து, பள்ளி கல்வித்துறையின் சார்பில் 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பெருந்தலைவர் காமராஜர் விருதுதினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். மேலும், கல்வியுடன் பல்வேறு இதர செயல்பாடுகளிலும் சிறந்து விளங்கும் மாணவ, மாணவியர்களுக்கு 10ம் வகுப்பு அளவில் ரூ.10,000/-மும், 12ம் வகுப்பு அளவில் ரூ.20,000/-மும் பரிசு தொகையும் வழங்கினார். 2017 - 2018ம் ஆண்டில் தொடக்க கல்வித்துறையின் மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தாறு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கொப்பம்பட்டி, தூத்துக்குடி நகர் பகுதியை சார்ந்த மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, சாத்தான்குளம் ஒன்றியம் சமுத்துபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி உள்ளிட்ட பள்ளிகளுக்கு கேடயங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, மாவட்ட கல்விஅலுவலர்கள் திருமதி.வசந்தா (தூத்துக்குடி), திரு.மாரியப்பன் (கோவில்பட்டி) மற்றும் அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.